VNR7T

விருதுநகர் மாவட்டம்

தொகுத்தறித் தேர்வு - டிசம்பர் 2024

-----

# வகுப்பு 7

நேரம்: 2.00 மணி **தமிழ்** மதிப்பெண்கள்: 60

## பகுதி - I

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** **10×1=10**

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:**

1) புலால் நாற்றம் உடையதாக அகநானூறு கூறுவது ..............

அ) காற்று ஆ) நாவாய் இ) கடல் ஈ) மணல்

2) பெயர்ப்பகுபதம் .............. வகைப்படும்.

அ) நான்கு ஆ) ஐந்து இ) ஆறு ஈ) ஏழு

3) மிளகாய் வற்றலின் .............. தும்மலை வரவழைக்கும்.

அ) நெடி ஆ) காட்சி இ) மணம் ஈ) ஓசை

4) தன்குடியைச் சிறந்த குடியாகச் செய்ய விரும்புபவரிடம் .............. இருக்கக்கூடாது.

அ) சோம்பல் ஆ) சுறுசுறுப்பு இ) ஏழ்மை ஈ) செல்வம்

**ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக:**

5) இழைத்த மரத்தில் காணப்படும் உருவங்கள் ........... எனக் குறிப்பிடப்படும்.

6) கருத்துப் படங்களை அறிமுகப்படுத்தியவர் ............

**இ) பொருத்துக:**

7) உயிர்க்குக் கண்கள் - கலங்கரை விளக்கம்

8) மாட ஒள்ளெரி - கதிரவன்

9) பரிதி - முதனிலைத் தொழிற்பெயர்

10) பிடி - எண்ணும் எழுத்தும்

## பகுதி - II

**ஈ) ஓரிரு சொற்களில் விடையளிக்க: (ஏதேனும் ஐந்து மட்டும்)** **5×2=10**

11) கலங்கரை விளக்கத்தில் எந்நேரத்தில் விளக்கு ஏற்றப்படும்?

12) கப்பலின் உறுப்புகள் சிலவற்றின் பெயர்களைக் கூறுக.

13) இயற்சொல்லின் நான்கு வகைகள் யாவை?

14) கல்விச் செல்வத்தின் இயல்புகளாக நாலடியார் கூறும் செய்திகளை எழுதுக.

15) பகுபத உறுப்புகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

16) நூல்களை எவ்வாறு படிக்க வேண்டும்?

17) துன்பத்திற்குத் துன்பம் உண்டாக்குபவர் யார்?

**உ) ஓரிரு தொடர்களில் விடை தருக: (ஏதேனும் மூன்று மட்டும்)** **3×4=12**

18) இக்காலத்தில் மக்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதற்குக் கடற்பயணத்தைப் பெரிதும் மேற்கொள்ளாதது ஏன் எனச் சிந்தித்து எழுதுக.

19) கல்வியே அழியாத செல்வம் என்பதை விளக்குக.

20) கீரைப்பாத்தியும் குதிரையும் எக்காரணங்களால் ஒத்திருக்கின்றன?

21) தந்த ஓவியங்கள் கேரளாவில் அதிகம் காணப்படுவது ஏன்?

22) முதனிலை திரிந்த தொழிற்பெயர் என்றால் என்ன? சான்று தருக.

## பகுதி - III

**ஊ) எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளி:** **5×2=10**

23) **கலைச்சொல் தருக:**

அ) Harbour -

ஆ) Guidance -

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



24) **பொருத்தமான காலம் அமையுமாறு திருத்தி எழுதுக:**

அ) அமுதன் நேற்று வீட்டுக்கு வருவான்.

ஆ) கண்மணி நாளை பாடம் படித்தாள்.

25) **சரியான சொல்லைக் கொண்டு நிரப்புக:**

(அவை, உன், நீ)

அ) ............. என்ன செய்து கொண்டிருக்கிறாய்?

ஆ) ............. பெயர் என்ன?

26) **பின்வரும் சொற்களை இருபொருள் தருமாறு தொடரில் அமைத்து எழுதுக:**

அ) கல்

ஆ) மாலை

27) **பின்வரும் எழுத்துகளுக்குப் பொருள் எழுதுக:**

அ) தா .............

ஆ) தை .............

28) **கொடுக்கப்பட்டுள்ள சொல்லை ஒரு தொடரில் முதல் மற்றும் இறுதிச் சொல்லாகக் கொண்டு சொற்றொடர் உருவாக்குக:**

அ) ஓவியக்கலை

29) **இடைச்சொல் 'ஐ' சேர்த்துத் தொடரை மீண்டும் எழுதுக:**

அ) புல் தின்றது

ஆ) பாடல் பாடினாள்

## பகுதி - IV

ஏ) **பின்வரும் கவிதைப் பகுதியை அடிபிறழாமல் எழுதுக:** **4+2=6**

30) வானம் ........... எனத் தொடங்கும் 'கலங்கரை விளக்கம்' பாடலை அடிபிறழாமல் எழுதுக.

31) தொட்டனைத்து ........... எனத் தொடங்கும் குறளை எழுதுக.

## பகுதி - V

ஏ) **ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளி:** **1×6=6**

32) ஆழ்கடலின் அடியில் - கதையைச் சுருக்கி எழுதுக.

33) நீங்கள் சுற்றுலா வழிகாட்டியாக இருந்தால் சுற்றுலாக் கையேடு என்னும் பகுதியில் உள்ள இடங்களைப் பார்வையிட வருபவர்களுக்கு எவ்வாறு விளக்கிக் கூறுவீர்கள்?

ஐ) **ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளி:** **1×6=6**

34) **கடிதம் எழுதுக:**

உங்கள் பகுதியில் நூலகம் ஒன்று அமைத்துத்தர வேண்டி நூலக ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

35) **கீழ்க்காணும் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக:**

**எங்கள் ஊர்**

(முன்னுரை - அமைவிடம் - பெயர்க்காரணம் - தொழில்கள் - சிறப்புமிகு இடங்கள் - திருவிழாக்கள் - மக்கள் ஒற்றுமை - முடிவுரை)

----------

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com